

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இன்று (15.08.2016) நடைபெற்ற 70-வது சுதந்திரதின விழாவில், தேசிய கொடியினை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு. தர்மராஜன் இ.கா.ப., உடனுள்ளார்.

செ.வெ.எண்: 532/2016 நாள் : 15.08.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தில் 70-வது சுதந்திர தின விழா கொண்டாட்டம்.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள்**
**தேசியக்கொடியினை ஏற்றி வைத்து,**
**62 பயனாளிகளுக்கு ரூ.12,87,730/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டரங்க மைதானத்தில் 70-வது சுதந்திர தின விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு. தர்மராஜன் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதன்பின் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார்.

நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்ச்சியில், முன்னாள் படைவீரரின் மகளுக்கு திருமண நிதியுதவியாக ரூ. 20 ஆயிரமும் மற்றும் கல்வி ஊக்கப்பரிசுத்தொகையாக ரூ.5 ஆயிரமும், வருவாய்த்துறையின் மூலம், கருணை அடிப்படையில் 2 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளையும்,

சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ், 4 பயனாளிகளுக்கு ஊனமுற்றோர் உதவித்தொகையாக மாதந்தோறும் தலா ரூ. 1,000/- பெறுவதற்கான ஆணைகளையும், ஒரு பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.1,000/- பெறுவதற்கான ஆணையினையும், ஒரு பயனாளிக்கு ஆதரவற்ற மாற்றுத்திறனாளி உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.1,000/- பெறுவதற்கான ஆணையினையும், திருமணமாகாத 50 வயதை கடந்த 2 பெண்களுக்கு மாதந்தோறும் தலா ரூ. 1,000/- பெறுவதற்கான ஆணைகளையும், இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை 7 பயனாளிகளுக்கு தலா ரூ. 1,000/- பெறுவதற்கான ஆணைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.18,030/-க்கான முடநீக்கியல் சாதனங்களும், வேளாண்மைத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.29 ஆயிரம் மதிப்பிலான தென்னங்கன்றுகளும்,தோட்டக்கலைத் துறை சார்பாக 3 பயனாளிகளுக்கு ரூ.60,600/-க்கான மதிப்பிலான நல்லமிளகு பரப்பு மற்றும் ரோட்டரி டில்லர்களும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 2015-2016-ம் ஆண்டுக்கான தீண்டாமை இல்லாத மற்றும் மத நல்லணக்கத்துடன் வாழும் சிறந்த கிராமமாக தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திடல் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு, அதற்கான பரிசுத்தொகை ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினையும், 8 பயனாளிகளுக்கு ரூ.37,600/- மதிப்பிலான இலவச தேய்ப்புப்பெட்டிகளையும், 20 ஆண்டு காலம், விபத்தின்றி ஊர்தி ஒட்டியமைக்காக திரு. கிறிஸ்டோபர் ஜெயசீலன் என்பவருக்கு சுகாதாரத்துறையின் மூலம் ரூ. 15 ஆயிரம் மதிப்பிலான தங்கப்பதக்கத்தையும், கலை பண்பாட்டுத்துறை சார்பாக, 2013-2014, 2014-2015, 2015-2016-ம் ஆண்டு கலை இளமணி, கலை வளர்மணி, கலைச்சுடர்மணி, கலைநன் மணி, கலைமுதுமணி என 15 கலைஞர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் ரூ.82,500/- மதிப்பிலான

காசோலைகளையும் என மொத்தம் 62 பயனாளிகளுக்கு ரூ.12,87,730/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று (15.08.2016) வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து அரசுத்துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 123 அரசு அலுவலர்களுக்கும், தனித்திறமை கொண்ட 3 நபர்களுக்கு சமூக பணியாளர்களுக்கான நற்சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கோட்டார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு முதல் பரிசும், மைலாடி, எஸ்.எம். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இரண்டாவது பரிசும், வட்டவிளை, அரசு நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மூன்றாவது பரிசும், கோட்டார் டி.வி.டி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் சுசீந்திரம் அரசு நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி. மாயா சவான், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் துணைவியார் திருமதி. அஞ்சனா தர்மராஜன், அரசு ரப்பர் கார்ப்பரேஷன் இயக்குநர் திரு. ராஜேஷ்குமார் டோர்பரா இ.வ.ப., பொது மேலாளர் திரு. சம்பத் லால் குப்தா இ.வ.ப., திருமதி. செண்பக பிரியா இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்ஸி லீமா அமலினி, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. எம்.எஸ்.சாரதாமணி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் திருமதி. ஜான்சிலின் விஜிலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு. பொ.இராஜேந்திரன் (பொது), திரு.நிஜாமுதீன் (வேளாண்மை), திரு. பஹ்து முகமது நசீர் (வளர்ச்சி), நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு ஆர். ராஜ்குமார், தனி துணை ஆட்சியர் திரு. சந்திரன், முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.எ.வி. மூர்த்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.